1987 ஏப்ரல் 8] [திரு அ. மலர்மன்னன்]

பொறுப்பினை இன்றையதினம் நெல்லை மாவட்டத்திலே இல்லாமல், திருவனந்தபுரத்திலே இருந்து ஆட்களை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக இன்றையதினம் அதற்கு அருகிலே இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தை விட்டுவிட்டு—ஒரு திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னால், அப்படித் தொடங்கப்பட்ட திட்டத்திற்கு இந்த மாநிலத்திலே இருக்கின்ற ஆட்களைப் பெருவாரியாக எடுக்கவேண்டும் என்ற நியதியும், வழிமுறையும் இதுவரையிலேயும் கடைப்பிடிக்கப்பட்டு வந்து இருக்கிறது. ஆனால் இன்றையதினம் அந்தத் திட்டத்திலே (குறுக்கீடுகள்) . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்ஃபர்மேஷனிலே ரொம்ப வேண்டாம். பதில் கொடுப்பதற்கு இங்கே யாரும் இல்லை. (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் என்னிடம் முன் அனுமதி கேட்கவில்லை. என்னிடம் நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று சொல்லவில்லை. எதைச் சொல்லி கேட்கப் போகிறீர்கள், என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நாளைக் காலை உங்களை அனுமதிக்கிறேன்.

3. விதி 110 (1)-இன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.

(அ) தமிழக வறட்சிநிலை குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110 (1)-ன் கீழ் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிக்க நான் விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலை குறித்து, ரூபாய் 347 கோடியே 25 இலட்சத்திற்கு நிதியுதவி கோரி ஒரு விவர அறிக்கை 13—3—1987 அன்று மைய அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதையொட்டி, மத்திய நிபுணர் குழு இம்மாநிலத்திற்கு வருகை தருவதற்கு முன்னதாக உடனடியாக ரூபாய் 30 கோடி முன்பணமாக அளிக்கும்படி மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. 31—3—1987 வரை வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், 1,631 ஆழ்துளைக் கிணறுகளும், 25 திறந்த வெளிக் கிணறுகளும் முடிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக 4 கோடியே 34 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. குடிநீர் வடிகால் வாரியம் தனது வளமையான திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடியே 81 இலட்சம் செலவில் 1524 ஆழ்துளைக் கிணறுகள்

அமைத்துள்ளது. பல்வேறு அரசுத் துறைகள் செயல்படுத்தும் திட்டங்களைத் தீவிரப்படுத்தி விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூபாய் 26 கோடியே 31 இலட்சத்து 99 ஆயிரம் செலவில், 1 கோடியே 24 இலட்சத்து 99 ஆயிரம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 11-10)

வறட்சியின் காரணமாக மாநிலம் முழுவதும் ஏற்பட்டிருக்கும் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கும் நோக்கத்தான் குடிநீராகப் பயன்படுத்தத் தக்க நீரைப் பெற்று இருக்கும் பாசனக் கிணறுகளை—1956-ஆம் ஆண்டைய தமிழ்நாட்டு கோரிக்கை கட்டளை மற்றும் அசையாச் சொத்துக்களைக் கையகப்படுத்துதல் சட்டத்தின்கீழ் கோரிப் பெறுமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்காக அவர்கள் அச்சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியாகச் செயல்பட அரசால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர். மத்திய நிபுணர் குழு தமிழ்நாட்டின் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிடவும், அரசு அனுப்பியுள்ள விவர அறிக்கையைப்பற்றி அரசு அலுவலர்களிடம் விவாதிக்கவும் 12—4—1987 ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னைக்கு வர இருக்கிறது. இந்த மத்திய நிபுணர் குழுவின் தலைவராக மத்திய வேளாண்மைத்துறை இணைச் செயலாளர் திரு. ஜே. ஆர். சாஹா இருப்பார். அதனுடைய உறுப்பினராக மத்திய அரசின் நிதித் துறை இணை இயக்குநர் திரு. வி. சுவாமிநாதன் அவர்களும், சென்னையில் உள்ள மத்திய அரசினுடைய புகையிலைத் துறையினுடைய இயக்குநரான திரு. ஏ. எஸ். கோரி அவர்களும், ஊரக வளர்ச்சித்துறை துணை ஆலோசகர் திரு. வி. ரகு அவர்களும், மத்திய திட்டக் குழுவின் துணை ஆலோசகர் திரு. எம். எல். அகர்வால் அவர்களும்—ஆக மொத்தம் 4 உறுப்பினர்களைக் கொண்ட—ஒரு ஐவர் குழு வர இருக்கிறது. இந்தக் குழுவிற்கு திரு. ஜே. ஆர். சாஹா அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். இந்தக் குழு 12—4—1987 ஞாயிற்றுக்கிழமை மாலை டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்து சேருகிறது. 13—4—1987 மற்றும் 14—4—1987 ஆகிய 2 நாட்களிலும் வறட்சிப் பகுதிகளைச் சுற்றிப் பார்க்கிறார்கள். 15—4—1987 அன்று அலுவலர்களுடன் கலந்துரையாடல் நடத்தி அன்று மாலையே டெல்லிக்குச் செல்ல இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒன்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதாவது 14—4—1987 அன்று தமிழகத்தைப் பொறுத்த

வரையில் சித்திரை முதல் நாளாக இருப்பதன் காரணமாக ஆண்டுப் பிறப்பு என்று கருதப்படுகிற காரணத்தால் அந்த ஒரு நாளை விடுமுறையாக வைத்துக் கொண்டு, 15 ஆம் தேதியோடு 16-ஆம் தேதியையும் சேர்த்து வைத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுமானால் 13—4—1987 மற்றும் 15--4--1987 ஆகிய இரு நாட்களையும் வறட்சிப் பகுதிகளைப் பார்க்கிற நாட்களாக வைத்துக் கொண்டு 16-ஆம் நாளன்று அரசு அலுவலர்களுடன் கலந்து பேசுகிற நாளாக வைத்துக் கொள்கிற சூழ்நிலை ஏற்படும். அவர்கள் 12—4—1987 அன்று மாலை வருவதாக இருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை நகரில் உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்குவதில் தாமதம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை நகரில் உணவுப் பங்கீட்டு அட்டை கிடைக்காத பலர், மனுச் செய்தும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை உணவுப் பங்கீட்டு அட்டை வழங்காதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னை நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் 1986-ம் ஆண்டில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உதவி ஆணையாளர்களிடம் புதியதாக குடும்ப அட்டைகள் கேட்டு 5,682 பேர் விண்ணப்பம் செய்தனர். மேலும் 6,329 பேர் முன்பு இருந்த இடங்களில் குடும்ப அட்டையை திருப்பிக் கொடுத்து விட்ட சான்றிதழுடன், புதிய குடும்ப அட்டைகள் கேட்டு விண்ணப்பித்தனர். ஆக மொத்தம் 12,011 பேர் விண்ணப்பித்தனர். அதில் 9,381 பேருக்கு புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டு விட்டது. விண்ணப்பங்களில் கொடுத்திருந்த முகவரியில், விண்ணப்பதாரர்கள் இல்லாததாலும், முன்பு